
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | ஆகஸ்டு 1992 | இதழ் 8



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | : | காலை 9-30—11-00...காலை ஆராதனை |
| ,, | : | பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி |
| ,, | : | மாலை 7-15—8-30...மாலை ஆராதனை |
| செவ்வாய் | : | மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு |
| வியாழன் | : | மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு |
| வெள்ளி | : | மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை) |
| சனி | : | மக்கள் சந்திப்பு |

## தலைப்புச் செய்திகள்


1. *அப்போஸ்தலர் 19:25* — *1-5*
2. *அஸ்தோத் மொழி என்னும் கலப்படச் சொல்லாட்சி* — *6-12*
3. *துன்மார்க்கர் வெட்கப்படட்டும்* — *13-16*
4. *கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு* — *17-25*
5. *சிறுபிள்ளைத்தன அடாவடித்தனம்* — *26-27*
6. *கிறிஸ்துவின் சபையைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்* — *28*

THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ

Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 5. August—1992 Issue 8

**ஆசிரியவுரை**

# அப்போஸ்தலர் 19:25

**மனிதர்களே, நமக்கு இந்தத் தொழிலினால் நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது என்று அறிவீர்கள்!**

மக்களுடைய அறியாமை, அக்கறையின்மை, மூடநம்பிக்கை, மதவெறி ஆகியவைகளைச் சில சுயநலமிகள் தங்களுடைய நலனை பாதுகாத்துக் கொள்வதற்கும், [illegible]யைப் பெருக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதை நாம் கா[illegible]கிறோம். இது இன்றைக்கு மட்டும் அல்ல; பன்னெடு நாட்களாகவே [illegible]டந்து வருகிற தொடர் மோசடி என்றும் தெரிகிறது. சிலர் வீ[illegible]டிலே செத்துப்போன எலிகளைக் கொண்டுவந்து வீதியிலே போ[illegible] விட்டு, 'துர்நாற்றம்' தாங்கமுடியவில்லை. பார்த்துக்கொண்டு [illegible]ற்கிறீர்களே, ஏதாவது செய்யுங்களேன் என்று ஊரைக் கூப்பிட்டு ஓலம் இடுவார்கள். மக்கள் நடந்தது தெரியாமல் எலியை அப்புறப்படுத்தத் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பிரச்னையை உருவாக்கினவர் வேடிக்கை பார்த்துக்கொண்டு அவர்கள் படுகிற அவஸ்தையை ரசித்துக்கொண்டிருப்பார். அப்படிப்பட்ட இனத்தைச் சேர்ந்த இந்த சுயநலக் கும்பல் மக்களுடைய நன்மைக்காகவே வாழ்பவர்கள் போன்று காட்டிக்கொள்வார்கள். ஆனால், உண்மை என்னவென்று கூர்ந்து கவனித்தால் இவர்கள் தங்களுடைய பேருக்கும் புகழுக்கும், செல்வாக்குக்கும் வாழ்க்கை வசதிக்கும் கேடு நேராவண்ணம் காத்துக் கொள்வதற்காகவே பிரச்னைகளை உருவாக்கி, மக்களுடைய உணர்ச்சிகளில் நஞ்சைப் பாயவிட்டு, அவர்களுடைய நரம்புகளில்

முறுக்கேற்றி ஏழை, எளிய மக்களின் மேம்பாடும் நல்வாழ்க்கையுமே தங்களுடைய வாழ்க்கை இலட்சியம் என்று நம்பும்படி கூச்சலிடுவர். விவரம் தெரியாத மக்கள் கூட்டமும் அவர்களுடைய கபட நாடகத்தை அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்று, அவர்கள் ஆட்டுவிக்கிறபடி எல்லாம் ஆடி வம்பில் மாட்டிக்கொள்வர். பின்னர் வருத்தப்படுவர்.

மக்களை மயக்கும் கலையில் கைதேர்ந்த இந்த சூழ்ச்சிக்காரர்களின் சூது மதியால் திசைமாறிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஏராளம். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையே எடுத்துக்கொள்ளுங்களேன். மரண நாளுக்கு சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர் நடந்த குருத்தோலைத் திருநாளில் மக்கள் கூட்டத்தினர் போட்ட ஆர்ப்பாட்ட ஒலி விண்ணைப் பிளந்தது. உற்சாக மிகுதியினால் சிலர் தங்கள் மேல் அங்கிகளையும், உருமால்களையும் அவர் சவாரி வந்த சாலை நெடுக விரித்தார்கள். இன்னும் வேகமுள்ள இளைஞர்கள் மரக்கிளைகளில் ஏறித் தழைதாம்புகளை ஒடித்து வழிநெடுகப் போட்டு தங்கள் உற்சாகத்தைக் காட்டினார்கள். முன் நடப்பாரும், பின் நடப்பாரும் ஓசன்னாப் பாடி மகிழ்ந்தார்கள். எண்ணி ஒரு வாரம் முடியவில்லை. அதே மக்கள் திரள் பிலாத்துவின் அரண்மனையைச் சுற்றி வளைத்துக்கொண்டு இவனை அகற்றும், சிலுவையில் அறையும், அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.

அந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம்? இயேசுவின் புகழ் பரவுவதைக் கண்டு எரிச்சலும் பொறாமையும் அடைந்த வேதபாதகர் பரிசேயர், பிரதான ஆசாரியக் கும்பலும் பொய்யான பல குற்றச்சாட்டுகளை மக்கள் மத்தியில் பரவவிட்டு மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றியும், ஆலயத்தைப் பற்றியும் ஓய்வு நாள் ஆசாரிப்புப்பற்றியும், இயேசுவின் கருத்துக்கள் தவறானவை என்று மக்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்ச்சிகளை விதைத்து விட்டனர். மக்கள் கூட்டமும் சாவி கொடுத்த பொம்மைகளைப் போலக் கத்தித் தீர்த்தனர். சூழ்ச்சி தற்காலிக வெற்றி பெற்றது.

புதிய ஏற்பாட்டின் அடுத்து சில பக்கங்களைப் புரட்டினால் எபேசு பட்டணத்தில் அப்போஸ்தலன் பவுல் சந்தித்த பயங்கரமான நிகழ்ச்சியொன்றை அப்போஸ்தலர் நடபடிகள் 19 ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். தட்டான் ஒருவன், பெயர் திமேத்திரியு, **தியானாள்** என்ற தேவதையின் கோவிலைப் போன்று சிறு, சிறுகோவில்களை வெள்ளியினால் உண்டு பண்ணி, விற்பனை செய்து பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டுவந்தான். அவனைப் போல வேறு சிலரும் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தியானாள் தேவதையை ஒரு தெய்வமாக மதித்து வழிபட்டார்களா என்

பதைப் பற்றியெல்லாம் ஒன்றும் சொல்லப்பட வில்லை. அந்தத் தேவதையைத் தொழுகிற மக்களுக்கும் இந்தத் தொழிலாளிக்கும் எவ்விதமான ஐக்கியமோ, வேறு எவ்விதமான ஈடுபாடோ இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் அந்தச் சிலை விற்பனையில் நல்ல சம்பாத்யம் இருந்தது என்பது மட்டும் தெரிகிறது.

அப்போஸ்தலன் பவுலாரின் மூன்று ஆண்டு கடும் உழைப்பு பெரும் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கிய நேரம் அது. பிரபல மந்திரவாதிகள் கூட தங்கள் மனமாற்றத்தைக் குறிக்கும் வகையில் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான சுவடிகளை எரித்துத் தங்கள் விசுவாசத்தின் உறுதியைப் பொதுமக்களுக்குப் பறைசாற்றினர். கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்தது. அநேக மக்கள் சத்தியத்தை அறிந்ததினாலே மூட நம்பிக்கை குறைந்ததும், மனிதர்களால் கற்பனை செய்யப்பட்டதுமான கட்டுக் கதைகளையும் அதை அடிப்படையாகக் கொண்ட மதங்களையும், அவைகளின் விபரீதமான கற்பனையால் உருவாக்கப்பட்ட கடவுள்களையும் அவைகளை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்தும பேர்வழிகளையும் மக்கள் வெறுத்து ஒதுக்கிவந்தனர். அதன் விளைவாக சிலை விற்பனை குறைந்தது. சற்றேறக்குறைய மூன்று ஆண்டு காலமாக பவுல் வீடுகளிலும் பொது இடங்களிலும் பிரசங்கித்து வந்தார். அப்பொழுதெல்லாம் இது என்ன, ஏது என்று இந்தக் கூட்டம் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இந்தப் புதிய மார்க்கம் சொல்லுகிற காரியங்களில் உண்மை இருக்கிறதா? இது நம்முடைய கலாச்சாரத்துக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றதா? இந்த மார்க்கம் கூறுகிற வழியில் சென்றால் நித்திய ஜீவன் கிடைக்குமா? என்பதைப் பற்றியெல்லாம் எப்பொழுதாவது சிந்தித்திருப்பார்களா என்றால் இல்லை என்றே கூறலாம். அல்லது இதற்கு முன்னதாக தியானாளின் மேல் மக்களுக்கு உள்ளபக்தி நிலையை மேம்படுத்துவதற்கு உருப்படியாக ஏதேனும் செய்தார்களா? நிச்சயமாக இல்லை. பின் இந்தத் திடீர் பக்திக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும். கூட்டத்திற்கும் கூக்குரலுக்கும் என்ன அடிப்படை என்று-கவனித்தால் அந்தக் கும்பலின் தலைவனே கூறுகிறமாதிரி **''மனுஷர்களே இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது''** என்பதே பதிலாகும்.

ஆம் சகோதரர்களே, அவர்களுடைய கோபத்துக்கும் கொக்கரிப்புக்கும், எதிர்ப்புக்கும் சித்தாந்த அடிப்படையோ தத்துவார்த்த முரண்பாடுகளோ அன்றி கருத்து வேறுபாடுகளோ காரணங்கள் அன்று அவர்களுடைய சொந்த வாழ்க்கை வசதிகள் குறைந்து போயின. அவர்களுடைய முக்கியத்துவம் தேய்பிறை போன்று மங்கி மறைந்து கொண்டு வந்தது. அவர்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகளுக்கு ஆபத்து வந்து விட்டது. இதுதான்

உண்மைநிலை, ஆனால் அந்தக் காரணங்களைச் சொன்னால் மக்கள் ஆதரவைபெற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே அவர்களின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது; திட்டம் உருவானது தியானாளின்மேல் மக்களுக்கு இருக்கிற மூடபக்தியை மூலதனமாக வைத்து ஏதும் அறியாத அப்பாவி மக்களைத் தூண்டி விட்டு, கலகமூட்டி சத்தியத்தின் வெற்றியைச் சீர்குலைக்க முயற்சி செய்தார்கள் மக்களும் உண்மையறியாமல், உலுத்தர்கள் விரித்த வலையில் சிக்கி என்ன செய்கிறோம் என்றுகூட சிந்திக்காமல் கலகத்தில் பங்கேற்றனர். வேதம் அவர்களைப் பற்றி **''தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று கூட அனேகருக்குத் தெரியாதிருந்தது''** என்று ஒற்றைவரி விமரிசனம் செய்கிறது மக்கள் தங்களுக்குத் தாங்களே சிந்திக்க மறுக்கும் வரையிலும் இவ்விதமான அசம்பாவிதங்கள் குறைவதற்கு வாய்ப்பே இல்லை. இன்றைக்கும் மதத்தின் பெயராலும் நடக்கும் அநீதிகளை கயமை-கடவுளின் பெயராலும் யை ஆதாரமற்ற மூட நம்பிக்கைகளை எடுத்துக் காட்டி, இது வேதத்துக்குப் புறம்பானது, தேவனுடைய அங்கீகாரம் பெறாத புளுகு, சுய நலமிகளாலும் தெய்வ பயமற்-றவர்களாலும் சேர்க்கப்பட்ட இடைச்செருகல், ஆதி அப்போஸ்-தலர்களால் போதிக்கப் படாதது, ஆதித் திருச்சபை அனுஷ்டிக்காதது என்று சத்திய வேதத்தின் பக்கங்களைப் புரட்டி ஆதாரம் காட்டினால் ஒரு சில அசைவுகளை ஆங்காங்கே காண்கிறோம். ஆனால் மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். ''காரியங்கள் இப்-படி இருக்கிறதா என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்-தார்கள்'' அப் 17:11 ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள'' *(1 தெச 5:21)* முயலுகி-றார்கள் என்று செய்தி எட்டிய வுடன் சீறுகிறார்கள். கட்டுப்பாடு விதிக்கிறார்கள், யோக்கியதைகளைப் பற்றி வினா எழுப்புகி-றார்கள், கூட்டம் போடுகிறார்கள், கமிட்டி போடுகிறார்கள்.

பாவம்! ஆத்திரம் அவர்களின்அறிவை மழுங்கச் செய்கிற-தினால் வரலாறு தரும் உண்மையை மறந்து விட்டனர். சத்தி-யத்தை அணைபோட்டுத் தடுத்துவிட முடியும் என்று நினைத்த தீமேத்திரியு அழிந்தான். அந்தக் கும்பலும் ஒழிந்தது. எந்த தியானாளுக்கு வக்காலத்து வாங்கினார்களோ, அந்த தேவதை-யும் அழிந்தாள். அந்தக் கொடுமையைத் தாங்கி நின்ற கோவிலும் பாழடைந்தது. ஏன்? எபேசு பட்டணமே கூட மண்மேடாகிப் போனது! ஆனால் சத்தியமோ உலகின் மூலை முடுக்குகளிலெல்-லாம் காற்றுப் புகாத இடங்களிலெல்லாம் ஏறுநடை போட்டுக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறது.

ஆகவே, மதத்துறையின் மகுடாதிபதிகளே, மக்களை சிந்திக்க அனுமதியுங்கள். சிந்திக்கத் தொடங்கினால் உங்கள் சொகுசு வாழ்க்கையும், சுபபோகமும் பறிபோகும் என்று எண்ணி அதைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சிகளில் ஈடுபடாதீர்கள். முயன்று தோற்றவர்களின் பட்டியலின் நீளத்தை அதிகப்படுத்த விரும்பினால் அது உங்கள் சௌகரியம் ஆனால், ஒரு வேண்டுகோள் தயவு செய்து புகழ் பெற்ற நியாய சாஸ்திரி கமாலியேலின் அறிவுரையை சற்றே கேளுங்கள். ''தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்'' (அப். 5 : 39).

**E. Z. செல்வநாயகம்**

---

## சபையின் பெயர்

புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஒரே ஒரு சபை இருந்ததினால் மற்ற கூட்டங்களிலிருந்து அதை வேறுபடுத்திக் காட்டுவதற்கு ஒரு பெயர் தேவையில்லாதிருந்தது. கிறிஸ்தவர்களை வெறுமென, ''சபை'' யென்றும் அல்லது ''இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள்'' என்றும் சுட்டிக்காட்டலாம். புதிய ஏற்பாட்டில் பல பெயர்கள் இருக்கின்றன; இருந்தாலும் அவையெல்லாம் சபையைச் சுட்டிக்காட்டவே பயன்படுத்தப்பட்டுள்ளன; அவைகள் கட்டாயமாக, கொள்கைப் பிடிவாதமானவைகளாகவோ அல்லது பிரிவினைப் பெயர்க் கூட்டங்களைக் குறிக்கும் தொடர்ச் சொற்களாகவோ கருதிப் பயன்படுத்தப் படவில்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள இந்தச் சுட்டுப் பெயர்களுள் ஒன்றினை நாம் மனிதன் கற்பித்த பெயர் அல்லது ஒரு மனிதனுக்கு மதிப்பு தெரிவிக்கிறதற்காக இடப்பட்ட பெயர் ஒன்றிற்குப் பதிலாக வழங்கக் கூடாது.

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தியிருக்கிற, கீழே கொடுக்கப்பட்டுள்ள சபையின் பெயர்களைக் கவனியுங்கள்

1. தேவனுடைய சபை: 1:2; II கொரி. 1:1; I தீமோ. 3:15;
2. கிறிஸ்துவின் சரீரம் : கொலே. 1:18; எபே 5:23;
3. கர்த்தருடைய சபை : அப்போஸ்தலர் 20:28;

கிறிஸ்துவின் சபையார் : ரோமர் 16:16; மத்தேயு 16:18;

இன்றைக்கு ஐந்நூறுக்கும் அதிகமான சபைபிரிவுகள் இருப்பது கிறிஸ்துவின் சரீரத்தைச் வெட்டி கூறு போடுவதற்குச் சமம். சிந்திப்பீர், செயல்படுவீர்.

---

# அஸ்தோத் மொழி என்னும் கலப்படச் சொல்லாட்சி

பூலோகம் எங்கும் காணப்படும் மக்கள் அனைவரையும் தேவன் தான் படைத்தார் எனினும், ஒரு காலக் கட்டத்தில் தமக்கென்று ஒரு இன மக்களைத் தெரிந்து கொண்டு, அந்த இனத்தின் வழியாக உலகமனைத்திலும் உள்ள மக்களின் பாவத்தைப் போக்கும் கிருபாதார பலியாக இயேசு கிறிஸ்துவை அனுப்பித் தந்தார்.

இவ்விதமாய்த் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை சிறப்பாக ஆசீர்வதித்து, அவர்களுடைய தேவைகளை அற்புதமான முறையில் சந்தித்து, அவர்களுடைய யுத்தங்களை முன்நின்று நடத்தினார்.

அதற்கு ஈடாக அவர்கள் தம்மை சேவித்து, கனப்படுத்தி தூய வாழ்வு வாழ வேண்டும் என்று எதிர்பார்த்தார். அந்த மக்களைச் சுற்றிலும் வாழ்கிற விக்கிரக ஆராதனைக் காரர்களோடு உறவு வைத்துக் கொண்டு அவர்களோடு கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொள்ள வேண்டாம் என்று எச்சரித்திருந்தார். அப்படிச் செய்தால் நாளாவட்டத்தில் அவர்கள் விக்கிரக ஆராதனையில் ஈடுபாடு கொண்டு கர்த்தரையும் அவருடைய பிரமாணங்களையும் விட்டு விலக நேரிடும் என்று அறிந்திருந்தார்.

பழைய ஏற்பாட்டு வரலாற்றைப் படிப்பவர்களுக்கு இப்படிப் பட்ட காரியம் பல முறை நிகழ்ந்துள்ளதை வாசிக்க முடியும். நெகேமியாவின் புஸ்தகத்தில் கூட இதைப் பற்றி சில விஷயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவர்கள் அண்டை நாட்டவரான அம்மோன், மோவாப் மற்றும் அஸ்தோத் நாட்டு மக்களோடு உறவு வைத்துக் கொண்டு அவர்கள் பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். அந்தக் கலப்புத் திருமணங்களில் பிறந்த குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது தங்கள் தாய்மார்கள் பேசும் மொழியையும் கலந்து யூத மொழியை அரையும் குறையுமாக பேசினார்கள். இதன் விளைவுகளையும் அபாயங்களையும் நெகேமியா அவர்களுக்கு விளக்கிக் கூறி அவர்கள் அம் மாதிரிப் பழக்கங்களை மேற் கொள்ளக் கூடாது என்று கண்டித்ததுடன் ஏற்கனவே அப்படிச் செய்தவர்களை அடித்தும், மயிரைப் பிய்த்தும் தன் அருவருப்பை வெளிப்படுத்தினான். சாலமோன் அரசன் எவ்வளவு புகழ் வாய்ந்தவன். ஞானமுள்ளவன் அவனைப் போன்ற ஓர் அரசன் இருந்ததில்லை. அப்படிப் பட்டவனையே

அவனுடைய மனைவிமார்கள் வழுவிப் போகச் செய்ததை அவர்களுக்கு நினைவு படுத்தி புத்தி சொன்னான் என்று பார்க்கிறோம். (நேகே 13:23-27)

இம்மாதிரி கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு பிறந்த குழந்தைகளின் நிலை என்ன என்று பார்க்கும் பொழுது அவர்கள் அவர்களுடைய தாயின் மொழிகளையும் கலந்து யூத மொழியைப் பேசினார்கள். இன்னும் சிலர் யூத பாஷையே பேசத் தெரியாத அளவுக்கு அந்நிய மொழியில் நாட்டம் கொண்டார்கள். இதையெல்லாம் கவனிக்கும் பொழுது எவ்வளவு சீக்கிரம் பிறமொழியைப் பேசுகிறவர்கள் அவர்களுடைய காலாச்சாரத்தை நேசிக்கவும் அதை கடைப்பிடிக்கவும் தொடங்குகிறார்கள். அதனால் நன்மையை விட தீமையே அதிகம் ஏனெனில் அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற மக்கள் விக்கிரத ஆராதனைக்காரர்கள். அவர்களுடைய மொழி பேசி அவர்கள் கலாச் சாரத்தில் நாட்டம் கொள்ள ஆரம்பித்ததால் தேவனுடைய பிரமாணங்களிலும் வழிகளிலும் நாட்டம் குறைந்து, தேவனுக்குத்துதி செலுத்துவதில் ஆர்வமற்றவர்களாகவும் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை உணராமலும் போனார்கள். காலப்போக்கில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் தங்கள் தூய்மையைக் காத்துக்கொள்ள முடியாததால் பெரும் நஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவித்ததை நாம் பழைய ஏற்பாட்டு நூல்களிலே வாசிக்கிறோம்.

இவைகளெல்லாம் நமக்கு நல்ல பாடங்கள் இன்றைக்கும் கூட நாம் பிரிவுச் சபையாரோடோ வேறு சமயத்தைச் சேர்ந்தவரோடோ, கடவுளைப்பற்றி அக்கரையற்ற மக்களோடோ நாம் திருமண சம்பந்தம் வைத்துக் கொள்ளும்போது சிக்கலை நாமே வருவித்துக் கொள்கிறோம். அப்படிப்பட்ட திருமணங்களை ஒத்துக் கொள்பவர்களை இன்னும் சொல்லப் போனால் அப்படிப்பட்ட திருமணங்களை ஒழுங்கு செய்கிற பெற்றோர்கள் விசுவாசத்தில் பலஹீனமாக இருக்கிறார்கள் அல்லது கர்த்தருடைய சபையின் தூய்மை நிலையைச் சரியாக உணராமல் இருக்கிறார்கள் என்று தான் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் இருந்தால் அவர்கள் அத்தகைய திருமணங்களுக்கு இசைவுதம் மாட்டார்களே. இப்படிப்பட்டவர்கள் அழிந்துபோகிற அழகு, பாரம்பரியம், கல்வி, அந்தஸ்து ஆகியவைகளுக்காகத் தங்கள் ஆத்துமாவை அடகு வைத்து விடுகிறார்கள் என்றால் மிகையாகாது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் தங்களுடைய ஆத்துமாவையும் தங்களுடைய மக்களின் ஆத்துமாவையும் அல்ல, தங்கள் வருங்கால சந்ததியாரின் ஆத்துமாக்களையும் அடகு வைக்கின்றனர்.

இப்படிச் சொல்லும் போது நம் நாட்டில் நிலவுகின்ற ஜாதி உணர்வையோ நம் நாட்டில் இருக்கும் பல்வேறு மொழியுணர்வையோ நினைத்துக் கொண்டு சொல்லவில்லை. விசுவாச நிலையையும் ஆரோக்கியமான உபதேசம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டே சொல்லுகிறோம்- அவிசுவாசிகளோடு பிணைக்கப்படாமல் இருக்கவேண்டும். என்று பவுல் அடியார் கூறுகிறாரே. அதை வாசித்து சிந்தியுங்கள் (2 கொரி 6:14-18)

தனக்கோ அல்லது தன்னுடைய பிள்ளைகளுக்கோ ஏற்ற வரன் கிறிஸ்தவர்களிடையே கிடைக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது என்ன செய்யலாம்? நாம் தெரிந்து கொள்ளுகிற பெண் அல்லது பையனுக்கு சுவிசேஷத்தைப் போதித்து அவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதற்கு வாய்ப்பு உண்டா? என்று திருமண ஏற்பாடுகள் நடப்பதற்கு முன்பே அறிந்து கொண்டு அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கிவிட வேண்டும். சிலபேர் பெண்ணுக்காக வேண்டியும், பையனுக்காகவேண்டியும் மனம்மாறாமல் திருமுழுக்கு மட்டும் பெற்றுக் கொள்ள சம்மதிப்பார்கள். திருமணம் முடிந்த பிறகு தங்கள் பழைய பாதைக்கே சென்று விடுவர். அப்படி நிகழ்ந்து விடாமல் விழிப்புடன் இருக்க் வேண்டும். அப்படிப்பட்ட ஏற்பாடுகளை வெற்றிகரமாகச் செய்த அநேகரை எனக்குத் தெரியும். நீங்களும் அப்படிச் செய்து உங்கள் ஆத்துமாவையும் நீங்கள் திருமணத்தில் ஈடுபடுத்தக் கூடியவர்களுடைய ஆத்துமாவையும் காப்பாற்றலாமே!

திருமணத்தின் மூலமாகத் தான் என்றில்லை. வேறு பல வகையிலும் நம்முடைய நண்பர்கள், உறவினர்கள் நம்மீது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முடியும். கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த நாம் மற்ற பிரிவுச்சபை மக்களை விட எண்ணிக்கையில் குறைவுள்ளவர்கள்ளாகவே இருப்போம். நாம் அவர்களோடு நண்பர்களாகவும், அயலகத்தாராகவும் உடன் ஊழியர்களாகவும் தொடர்பு கொள்ள நேரிடும் இப்படிப்பட்ட தொடர்புகள் மூலமாக நாம் அவர்களுடன் நட்பு கொண்டு கர்த்தருக்காக அவர்களை ஆதாயம் செய்யலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் தேவனுடைய வசனத்தை நல்ல முறையில் அறிந்திராவிட்டால் நாம் அவர்களை ஈர்க்க முடியாது மாறாக அவர்கள் நம்மை வசப்படுத்திக் கொள்வார்கள். நாம் அவர்களோடு முழுவதுமாய் ஒட்டிக் கொண்டு அவர்களுடைய தொழுகையில் கலந்து கொள்ளாவிடினும் அவர்களுடைய செல்வாக்கின் அழுத்தம் நம்முடைய விசுவாசத்தை பலஹீனமடையச் செய்து விட வாய்ப்புண்டுஅது பல வழிகளிலும் நம்மீது ஆதிக்கம் செலுத்தும். அது கூட ''அஸ்தோத்'' மொழி பேசின மாதிரி தான்,

எடுத்துக்காட்டாக கிறிஸ்துவின் சபையாரில் சிலர் ''சபைக்கு போகிறோம்'' என்று சொல்லுகிறார்கள். இந்த சொற்றொடரை அவர்கள் எங்கிருந்து கற்றுக்கொண்டார்கள்? தங்களுடைய பிரிவு சபை நண்பர்களிடமிருந்து. அவர்கள் தொழுகைக்காகக் கூடிவருகிற இடத்தையே சபை என்று நினைக்கிறார்கள். அதனால் சபைக்குப் போகிறோம் என்று சொல்லுகிறர்கள் அது வேதாகமத்துக்கு முரணான சொற்றொடர். சபை என்பது கட்டிடம் அல்ல. சபை என்பது அழைக்கப்பட்டவர்களுடைய கூட்டம் என்று மூல மொழியாகிய கிரேக்கம் சொல்லுகிறது ஆகவேசபைக்குப் போகிறோம் என்று கூறுவது தவறு. தொழுகைக்குப் போகிறோம் என்று சொல்வது தான் சரி.

இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா, ஐயா. சபைக்குப் போகிறோம் என்றால் தொழுகைக்குப் போகிறோம் என்று சின்னக் குழந்தைக்குக் கூடத் தெரியும். இதில் எல்லாம் குற்றம் கண்டு பிடித்தால் அப்புறம் எதுவுமே செய்ய முடியாது என்று சிலர் வாதிடுவர். ஆனால் இப்படிப்பட்ட சிறு சிறு விஷயங்கள் மூலமாக சாத்தான் மெல்ல உட்புகுந்து கள்ளப்போதகங்கள் எதுவுமே தவறில்லை என்று நினைக்கும் அளவுக்கு மக்களுடைய மனதை மரத்துப் போகப் பண்ணி விடுவான். ஆரோக்கியமான உபதேசச் சட்டத்திற்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்த கிறிஸ்தவர்கள் சிறு விஷயம் தானே என்று மெத்தனமாக இராமல் விழிப்புடன் இருக்க வேண்டும். பிரிவுக் கூட்ட மக்களுடைய நிலைக்குத் தாழ்ந்து தேவனுடைய குடும்பமாகிய சபையை-அது சம்பந்தப்பட்ட காரியத்தில் தவறான அர்த்தம் கொடுக்கும் வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. இதில் வேடிக்கை என்னவென்றால் அங்கத்தினர்கள் மட்டுமல்ல, ஊழியர்களே இப்படிப்பட்ட தவறான வார்த்தைகளை பயன்படுத்தும்போது என் மனம் மிகவும் வேதனையடைகிறது. சகோதரர்களே, நாம் நம்முடைய வேதாகமத்தை நன்கு பகுத்துப் படித்து வேதாகம பதங்களையே பயன்படுத்த வேண்டும்.

இதை வாசிக்கிற ஒருவர், ''பற்று இருக்க வேண்டியதுதான், ஆனால் வெறி இருக்கக்கூடாது'' என்று முணுமுணுக்கக்கூடும். இது வெறி அல்ல நண்பனே! கர்த்தருடைய பிள்ளைகள் என்று முத்திரை குத்திக் கொண்டிருக்கிற நாம் வேதம் பேசுகிறபடி பேச வேண்டுமே (1 பேது 4:11) சின்ன விஷயங்கள் தானே என்று இவைகளையெல்லாம் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவோமானால் மெல்ல மெல்ல வேதாகமத்தை விட்டு விலகி நம்முடைய மற்ற நண்பர்களைப் போலவே சமயச் சடங்குகள், ஆசாரங்கள் ஆகியவைகளை

ஏற்றுக் கொண்டு கர்த்தருடைய கட்டளைகளைப் பின்னுக்குத் தள்ளி விடுவோம். ஆகவே கவனம் தேவை!

இன்னொரு தவறான பழக்க வழக்கத்தையும் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. ''எங்கள் சபை, உங்கள் சபை என்று சபையைக் குறிப்பிடுவது. இப்படி ஒரு போதும் வேதம் குறிப்பிடுவதில்லை. சபையைக் கிறிஸ்துவே கட்டினார். ஆகவே அது கிறிஸ்துவுக்குச் சொந்தமானது (மத் 16 : 18; அப் 20 : 28) நாம் அதில் அங்கம் வகிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். அவரே அதற்காக மரித்தவர் (எபே 5 : 27) அவரே அதற்குத் தலைவர். (கொலோ 1 : 18) அவரே அதன் அடித்தளம். (1 கொரி 3 ; 11) ஆகவே தான் அதைக் கிறிஸ்துவின் சபை என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். (ரோமர் 16 : 16) இப்படியிருக்க உன் சபை என் சபை என்று சொந்தம் கொண்டாடுவதற்கு இடம் ஏது? மனிதர் யாரும் அதைக் கட்டவில்லை. ஆகவே சபையைக் கிறிஸ்துவின் சபை என்று அழைத்து நாம் அதன் அங்கங்கள் என்பது பொருத்தமாக இருக்கும்.

இன்னும், சில வேளைகளில் 'கிறிஸ்துவின் சபைப் பிரசங்கியார்' அல்லது கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் என்று சொல்வதைக் கேள்விப் படுகிறோம். இது கூட பிரிவுக் கூட்ட சபையார் களிடமிருந்து கடன் வாங்கிய சொற்றொடர்களே. இப்படிக் குறிப் பிடும் போது பிரிவுக் கூட்ட சபையார் சொல்வதும் செய்வதும் எல்லாமே தவறு என்று குறை சொல்லுகிறேன் என்று சிணுங்கக் கூடாது. அநேக காரியங்களில் அவர்களுடைய சொல்லும் செயலும் வேதத்தின் அடிப்படையை விட்டுப் பாதை மாறிப் போயிருக்கிறது என்று சுட்டிக் காட்டித் தான் தீரவேண்டும்.

அவர்களைப் பின்பற்றி நாமும் தவறு செய்யாமல் நாம் பயன்படுத்துகிற சொற்றொடர்களும், நம்முடைய செயல்பாடுகளும் கர்த்தருடைய வசனத்துக்கு ஒத்திருக்கிறதா என்பதைக் குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். வேதாகமம் வெறுமனே '' கிறிஸ்தவர்கள் '' (எவ்விதமான அடைமொழியும் இல்லாமல்) 'சுவிசேஷப் பிரசங்கியார்', 'நற்செய்தி உரைஞர்', 'மூப்பர்கள்' 'உதவிக் காரர்கள்', 'உபதேசிகள்' என்ற சொற்களையே பயன் படுத்தியிருப்பதைக் கவனிக்கவும்.

அதே போல ''கிறிஸ்துவின் சபை உபதேசம்'' அல்லது 'கிறிஸ்துவின் சபைக் கொள்கை' என்று கூறக் கூடாது. கிறிஸ்துவின் உபதேசம் என்றே சொல்ல வேண்டும். சொல்லாட்சியில் கலப்படம் என்று அர்த்தம் கொள்ளும் அஸ்தோத் மொழி என்பது ஆரம்-

பம்தான். ஒருமுறை இவ்விதமான பழக்கத்தை நாம் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டால் மற்ற விஷயங்களிலும் கூட பிரிவுச் சபை யாரைப் போலவே மற்ற விஷயங்களில் இருக்க ஆசை வந்து விடும். பிறகு நாள்தோறும் முளைத்துக் கிளம்பிக் கொண்டிருக்கும் பிரிவுக் கூட்ட சபைகளில் இதுவும் ஒன்று என்ற இழி நிலைக்குத் தாழ்ந்து விடுவோம். நமக்குள்ளே என்ன பிரதர், வித்தியாசம் வேண்டிக் கிடக்கிறது? என்று அவர்களோடு கை கோர்த்து சத்தியத்தை அசட்டை செய்வோம். 'கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார்' என்று சொல்வதை விட்டுவிட்டு, எனக்கு விருப்பமான சபையில் சேர்ந்து கொண்டேன் என்றெல்லாம் சொல்ல ஆரம்பபித்து விடுவோம். [அப் 2:47] மெல்ல மெல்ல கிறிஸ்துமஸ் கொண்டாடவும், லெந்து நாட்கள் அனுஷ்டிக்கவும் தொடங்கி விடுவோம். பின்னர் தொழுகையில் இசைக் கருவிகள் மீட்பது தவறு இல்லை என்ற எண்ணம் வந்து விடும். ''பாஸ்டர்'' என்று யாரும் நம்மை அழைத்தால் அதை கண்டு கொள்ளாமல் கண் ஜாடையாக இருந்து கொள்வோம். இப்படியே கொஞ்சங் கொஞ்சமாக அவர்களுடைய கொள்கை, கோட்பாடுகளை நம்மையும் அறியாமலேயே ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விடுவோம். அவ்வளவு தூரம் போக மாட்டோம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேவனைப் பிரியப் படுத்துவதை விட மக்களுடைய விருப்பத்துக்கு செவி சாய்த்த ஆரோனின் மனப்போங்கு உள்ளவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களால் இழுக்கப்படுவது சாத்தியம். ஆகவே வேதாகமம் சொல்லுகிற அடையாளங்களையுடைய சபை என்ற சிறப்பு நிலையையிழந்து விடாமல் இருக்க ஜாக்கிரதையாக இருங்கள்.

இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைப் புரட்டி, இப்படி அவர்கள் சின்ன சின்ன விஷயங்களில் அலட்சியமாயிருந்து வழி விலகிப் போனதற்கு அவர்கள் கொடுத்த விலையை வாசித்துப் பாருங்கள், இதைக் குறித்து இயேசுகிறிஸ்துவும், பவுலும், பேதுருவும், யோவானும் இன்னும் மற்ற பரிசுத்தவான்களும் கொடுத்துள்ள எச்சரிப்பைவேதாகமத்தில் வாசித்து உணருங்கள். வஞ்சிக்கிற செல்வாக்கையும், உபதேசக் கோளாறுகளையும் குறித்து விழிப்போடு இருக்க வேண்டும் என்று உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பல சந்தர்ப்பங்களில் பெரிய விஷயங்கள் அல்ல, சின்ன சின்ன விஷயங்களே நமக்குள் கிரியை செய்து நம்மை விழச் செய்து தேவனை விட்டு விலகச் செய்து விடும். [பிர 10:1ஐ வாசித்து தியானிக்க]

அவருடைய வசனத்துக்குக் கீழ்படியவும், உண்மையாயிருக்கவும் அவருடைய வார்த்தைகளைப் பிரகடனப்படுத்தவும் தேவன் தாமே ஒத்தாசை புரிவாராக! எப்படி சத்தியம் நம்மை விடுதலையாக்

கிற்றோ அதே போல சத்தியம் தான் நம்மைத் தொடர்ந்து அந்த விடுதலை அடைந்த நிலையில் வைத்திருக்கவும் முடியும். ஒருமுறை நாம் சத்தியத்தை ஏற்றுக் கொள்வோமானால் பிறகு அதோடு எதையும் கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ அவசியம் இல்லையே. தேவன் அவருடைய ஆரோக்கியமான உபதேசத்தைக் கொடுத்திருக்கிறார். அதன் தூய்மையைக் காத்துக் கொண்டு அதன் ஆசீர்வாதங்களையும், அது வாக்களித்திருக்கிற நம்பிக்கையையும் அனுபவித்து மகிழ்வோமாக!

J.C. சோட்

## நீதிமான் யார்?

(எசே 18:5-9)

1. நியாயத்தையும் நீதியையும் செய்து
2. மலைகளின் மேல் சாப்பிடாமலும்
3. இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும்
4. தன் அயலானுடைய மனைவியைத் தீட்டப்படுத்தாமலும்
5. தூர ஸ்திரீயோடே சேராமலும்
6. ஒருவனையும் ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும்
7. கடன் வாங்கினவனுக்கு அடமானத்தை திருப்பிக் கொடுத்து
8. தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு
9. வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து
10. வட்டிக்குக் கொடாமலும்
11. பொலிசை வாங்காமலும்
12. அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி
13. மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து
14. கர்த்தருடைய கட்டளையின்படி நடந்து, உண்மையாயிருப்பவனே.

# துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!

*(சங்கீதம் 31:17)*

**''கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்: நான் வெட்கப்பட்டுப் போகாத படி செய்யும்; துன்மார்க்கர் வெட்கப்பட்டு பாதாளத்தில் மௌனமாயிருக்கட்டும்''** (சங். 31:17)

துன்மார்க்கர் பாவஞ் செய்கையில், பல வேளைகளில், வெக்கப்படுவதேயில்லை. எரேமியா தீர்க்கத்தரிசியின் நாட்களில் வசித்த மக்களைப்பற்றி அவர் கூறுகையில் **''அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப் படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்** ''(எரே 6:15) என்கிறார். சில துன்மார்க்கர்களைப் பற்றி ஒரு படி மேலே சென்று அவர் கூறுகிறார்: ''நீயோ நாணமாட்டேன் என்கிறாய்'' (எரே. 3:3). பாவம் சம்பந்தப்பட்ட காரியத்தில் மேலே குறிப்பிட்டவர்களின் நிலை உங்களுக்குப் பரிச்சயப்பட்டதாகத் தோன்றுகிறதா? ஆம் என்றே சொல்லுவீர்கள். ஏனெனில், இன்று தேவனுக்கும் அவருடைய வசனத்துக்கும் விரோதமாக கலகஞ்செய்யும் துன்மார்க்கர் நாணப்படுவதே இல்லை. தங்களுடைய பாவங்களுக்காக வெட்கப்படுவதற்கு மாறாக, பாவப் படு குழியில் விழாமலிருக்கும் நீதிமான்களை வெட்கப்பட வைக்க முயலுகின்றனர். இதே ஆயுதத்தைத் தான் இன்றைய இளைஞர்களுக்கு விரோதமாகவும் துன்மார்க்கர் பயன்படுத்துகின்றனர்.

கீழ்க்கண்ட உதாரணங்களைப் பாருங்கள் :

இன்றைய உலகில் சர்வசாதாரணமாகிப் போன தவறான பாலியல் உறவுகளில் ஈடுபடாத காரணத்திற்காக வாலிபர்களை வெட்கப்பட வைக்கின்றனர். தங்களுடைய கற்பைக் காத்துக் கொள்ளும் பரிசுத்தமான வாலிபர்களை நாணவேண்டியவர்களாகக் கருதுகிறது இன்றைய துன்மார்க்க உலகம், என்ற போதிலும், கிறிஸ்தவ வாலிபர்கள் இத்தகைய பரிசுத்த வாழ்க்கைக்காக நாணமடையத் தேவையில்லை. ''வேசித்தனத்திற்கு விலகியோடி (1கொரி 6:18) ''பாலியத்திற்குரிய இச்சைகளுக்கும் விலகியோடி (2 தீமோ 2:22) உன்னை சுத்தவானாகக் காத்துக்கொள்'' (1 தீமோ 5:22) என பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். தேவனுடைய மேற்கண்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது வாலிபர்கள் வெட்கப்படக்கூடாது. ஆனால் மாறாக, **துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!**

இன்றைய நடைமுறைப் பழக்கமாகி விட்ட பருவக்குறும்புகளுக்கு விலகி நிற்கிற வாலிபர்களைக் ''கட்டுப் பெட்டிகள்'' எனப் பட்டம் சூட்டி வெட்கப்படச் செய்கின்றனர். மதுபானம், அருந்தாதவன், பீடி, சிகரெட் பிடிக்காதவன், சீட்டாடத் தெரியாதவன் எல்லாம் வாலிப சமுதாயத்துக்கே லாயக்கற்றவன் என்று பண்புள்ள இளைஞர்களை மட்டந்தட்டி அவர்களுடைய ஆண்மையைக் குறித்துவினா எழுப்புகின்றனர் துன்மார்க்கர் என்றாலும் கிறிஸ்தவ வாலிபர்கள் இதற்காக வெட்கப்பட வேண்டியதில்லை. **''ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலக''** வேண்டுமென பேதுரு கூறுகிறார். (1 பேதுரு 2:11) மது, போதைப் பொருட்கள் இவற்றால் நமது சரீரத்தைக் கெடுத்துக்கொள்ள நமக்கு அதிகாரமில்லைஏனென்றால் நமது சரீரமானது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கிரையத்துக்கு வாங்கப்பட்டுள்ளது. தேவனை மகிமைப்படுத்தவே அதை உபயோகிக்க வேண்டும். (1கொரி 6:19-20)''மது மயக்கம்'' பரலோகத்தில் நமக்குரிய இடத்தைப் பறித்துப்போடும், (கலா5:21) என பவுல் கூறுகிறார் ஆகவே தேவனுடையஞானமான ஆலோசனை தரும் வசனங்களைப் பின்பற்றும் வாலிபர்கள் வெட்கப்பட ஒன்றுமேயில்லை. மீண்டுமாக, **துன்மார்க்கரே வெட்கப்படட்டும்!**

இன்றைய நவநாகரீக அலங்கோல அரைகுறை ஆடைகளை அணியாத வாலிபர்களை 'பத்தாம் பசலி' எனக்கூறி தங்கள் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி வைத்து வெட்கப்படச்செய்ய முயலுகின்றனர். நமது கிறிஸ்தவ வாலிபர்கள் ஒழுக்கமான ஒழுங்கான ஆடைகளை அணிவது வெட்கப்பட வேண்டிய காரியமாக இன்று கருதப்படுகிறது ஆனால் கிறிஸ்தவ இளைய சமுதாயம் இதற்காக நாணமுறத் தேவையில்லை, நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' (1 பேதுரு 2:9) என பேதுரு நம்மைப் பார்த்துக் கூறுகிறார். நமது ஆடைகளிலும் நமது வாழ்வின் இதர காரியங்களிலும் உலகிலிருந்து மாறுபட்டவர்களாக நாம் இருக்கவேண்டும். அடக்கமான வாழ்வைக் கடைபிடிக்கும் கிறிஸ்தவ வாலிபர்கள் அதற்காக வெட்கப்பட வேண்டிய அவசியமேயில்லை. **துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!**

இன்றைய அசிங்கமான, அருவருப்பான வாழ்க்கையைப் பற்றிக் கொள்ளாத வாலிபர்களை நாணமுறச் செய்ய துன்மார்க்கர்

முயலுகின்றனர். இன்றைய 'நாகரீக' உலகத்திற்கு ஒப்ப ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழாமலும், நகைச்சுவை என்ற பெயரில் கீழ்த்தரமான ஜோக்குகளை உதிர்க்காமலும் வாழும் வாலிபர்களை எள்ளி நகையாடி நாண வைக்க முயலுகிறது துன்மார்க்க உலகம் ஆனால் மேற்படி காரியங்களில் நமது வாலிபர்கள் வெட்கப்படத் தேவையில்லை. நமது ''நாவைப் பொல்லாப்புக்கும், உதடுகளை கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக் கொள்ள'' வேண்டும். (சங். 34:14) சாலமோன் ஞானி கூறுகிறார்: ''தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்'' (நீதி. 21:23). ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பத்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும் படி பேசுங்கள்'' (எபே. 4:29), என பவுல் எச்சரிக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு போதிக்கப்பட்ட வசனத்தை நமது வாலிபர்கள் பற்றிக் கொள்ளும் போது அவர்கள் வெட்கப்பட வேண்டிய காரியம் எதுவும் இருக்காது. **துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!**

இன்றைய சிற்றின்ப காமக் களியாட்டங்களில் சிக்காத வாலிபர்களை 'அனுபவிக்கத் தெரியாதவன்' என்று முட்டாள் பட்டம் சூட்டி நாணமுறச் செய்ய முயலுகிறது துன்மார்க்க உலகம். இருபாலாரும் கலந்து நீச்சலடிப்பது, நிர்வாண நடனம் ஆடுவது, ஆபாசத் திரைப்படங்களைப் பார்த்து ரசிப்பது இத்தியாதி களியாட்டங்களில் கலந்து கொள்ளாத கிறிஸ்தவ வாலிபர்களை நாண வைக்க முயற்சிக்கின்றனர் துன்மார்க்கர். என்றாலும், நமது வாலிபர்கள் வெட்கப்படத்தேவையில்லை. ஏனெனில் சிற்றின்ப களியாட்டங்களில் ஈடுபட்டால் இவ்வுலகத்தில் துன்பம், வேதனை, நிம்மதியின்மை ஆகியவைகளால் பாதிக்கப்பட்டு பரலோக இராஜ்ஜியத்திலும் நமது வாசஸ்தலம் பறிக்கப்பட்டுவிடும் எனவசனத்தின் மூலமாக தேவன் நம்மை எச்சரிக்கிறார். (கலா 5:19—21) நமது உள்ளத்தையும் உடலையும் பரிசுத்தமாக வைத்துக் கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளது. (மத் 5:8, 1 தீமோ 1:5) அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். ''கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்'' (பிலி 4:8) பொழுது போக்கு என்ற பெயரில் சிற்றின்ப களியாட்டங்களுக்கு விலகி, சீரான பாதையில் நடைபோடும் வாலிபர்கள், தங்கள் நல்ல முடிவுக்காக வெட்கப்படத் தேவையில்லை. **துன்மார்க்கர் வெட்கப்படட்டும்!**

வாலிபனான தீமோத்தேயுவை நோக்கி, "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும் ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" (1 தீமோ 4;12) தீமோத்தேயுவைப் போன்ற வாலிபர்கள் வெட்கப்படக்கூடாது. தேவனுக்கு விசுவாசமானவர்கள் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிற" மக்களாக இருக்கிறார்கள். (1 பேதுரு 2:9)

தாவீது கூறியது போல, "என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன் நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும். என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும் உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் முகாந்திரமில்லாமல் துரோகம் பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டு போவார்களாக, (சங் 25;2-3).

**வேத்லீ வெப்ஸ்டர்** **எஸ். எஸ். ராஜன்**

## வேதாகமத்தைப் பற்றிய உண்மைகள்

வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட ஒரு அற்புதமான நூல்.

1. "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" -2 தீமோ 3:16
2. "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்." —2 பேதுரு 1:21
3. "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கத்தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்." - எபி 1:1-2
4. "நாங்கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி." -1 கொரி 2:13

# கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு

சீயோன் மலை மீது கட்டப்பட்டுள்ள எருசலேமில் உள்ள ஒரு எளிய இரண்டு அடுக்கு மாடியின் உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்க்கிறதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அங்கே நீங்கள் காண்பது என்ன? பன்னிரண்டு மனிதர்கள் அங்கே அமர்ந்திருக்கிறார்கள். அதில் ஒருவர் குரு மற்ற பதினொருவர் சீடர்கள் அல்லது தொண்டர்கள். குருவானவர் முகத்தில் என்றுமே இல்லாத ஒரு வித சோகம். ஏனெனில் தனக்கு மிகவும் நெருக்கமான தன்னால் நேசிக்கப்பட்ட ஒரு நண்பனே இந்த இரவிலே தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான். தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படுவது உறுதி என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் மரணத்துக்கோ, வேறே ஒரு சிறு தண்டனை அடைவதற்குரிய ஒரு குற்றமும் செய்யவில்லை. என்றாலும் அடுத்த நாள் மாலைக்குள் அவர் மரணத்தை ருசி பார்ப்பது உறுதி. சரீரத்தில் ஏற்படும் வேதனையின் உச்சக் கட்டத்தை அனுபவிக்கப் போகிறார் என்பது திண்ணம் அதை நினைத்துப் பார்த்து உள்ளத்தில் வேதனைப் பெரு மூச்சோடு பிதாவை நோக்கி மன்றாட மண்டியிடுகிறார்.

முதலாவது அவர் தம்முடைய நிலையைக் குறித்து மன்றாடுகிறார். பிதா தனக்கு ஒப்படைத்த பணியினை வெற்றிகரமாக முடித்து விட்டு தான் வந்த நோக்கத்தை நிறைவு செய்து விட்டபடியால் ஆரம்பத்தில் அவருக்கு இருந்த மகிமையை திரும்பவும் தர வேண்டுமென்று இறைஞ்சுகிறார். (யோவான் 17:1-5) அதன் பின்னர் அவரோடு கூட அமர்ந்திருந்த பதினொரு சீடர்களுக்காக மன்றாடுகிறார். (யோவான் 17:6-9) அவர்கள் உலகத்துக்குள்ளே அனுப்பப்படும்போது அவர்களோடே இருந்து சத்தியத்தை எடுத்துச் சொல்ல அவர்களை பலப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

தனக்காகவும், தன்னோடு உண்டு உறங்கி, தன்னோடு கூடப் பணியாற்றிய சீடர்களுக்காகவும் மன்றாடினதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மரணம் அவரைத் துரத்திக்கொண்டு வரும் அந்த பயங்கரமான சூழ்நிலையில் உனக்காகவும், எனக்காகவும் கவலைப்பட்டு மன்றாடுகிறாரே அது நமக்கு ஆச்சரியமாக இல்லையா? ஏன் அப்படிக் கவலைப்பட்டார்? அவர் நம்மீது கொண்டிருந்த கரிசனையினால் அல்லவா? சொல்லப்போனால் அந்த அன்புதானே அவரைப் பூலோகத்துக்கு கொண்டு வந்தது. மரண பயம் ஒருவருடைய நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் வேளையில்

அவர் யாரைக் குறித்துக் கவலைப்படுவார்? தாம் நேசிக்கிற மனைவி பிள்ளைகள் நண்பர்களைத்தானே ஆனால் நம்முடைய அருமை இரட்சகர், பாவிகளின் நண்பன் நாம் இன்னும் பாவிகளாக, தேவனுக்குச் சத்துருக்களாக இருந்த போதே அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். நண்பனே, அந்த மாசற்ற, தூய அன்புக்குக் கைமாறாக நாம் என்ன செய்கிறோம்? நேசிப்பதற்கு அருகதை யற்ற நிலையில் பாவத்தில் உழன்று கொண்டிருந்த நம்மை நினைத்து மரிக்கும் தருவாயில் மறவாமல் நமக்காக மன்றாடி தம் முடைய அன்பை, கரிசனையை வெளிக்காட்டினாரே அதற்கு நானும் நீங்களும் என்ன செய்யப் போகிறோம்?

நம்மை நேசிக்கிற ஒருவர் மரிக்கும் தருவாயில் ஒரு காரியத்தை நம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறார் என்று வைத்துக்கொள்வோம் நன்றியுள்ளவர்களானால் அதை நிறை வேற்ற முயற்சிக்க வேண்டாமா? அவர் அவ்வளவு வேதனைக்கு மத்தியில் நம்மீது காட்டின பரிவை அலட்சியம் செய்வது சரியா? தயவுசெய்து அவர் நமக்காக மன்றாடின காரியங்களைக் கவனியுங்கள் அந்த எளிய மேன்மாடியில் உள்ளே மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த தேவாட்டுக் குட்டியின் வேதனை நிறைந்த மன்றாட்டை உற்றுக் கேளுங்கள்.

''நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்வதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்-காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் எல்லாரும் ஒன்றா-யிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசு-வாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்கிறார்'' (யோவான் 17:20, 31) அதாவது அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளான அனைத்து பேரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார். உலகத்தின் எந்த மூலை முடுக்-குகளில் பட்டி, தொட்டிகளில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். ''அவர் மன்றாடுகிற ஒருமைப்பாடு எப்படியிருக்க வேண்டும்?'' பல காலகட்டங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இந்த ஒருமைப் பாட்டைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர். சிலர், செயல், எண்ணம் ஆகியவைகள் ஒன்றாயிருக்க வேண்டும் என்றனர். வேறு சிலர், இயேசு இரட்சிக்கிறார் மற்றபடி அவரவர் வழிகளிலே நாம் நிற்போம் இதில் மட்டும் நாம் ஒரு மனம் உள்ள-வர்களாக இருந்தல் போதும் என்றனர். வேறு சிலர் ஒருவருடைய

விசுவாசமும் வாழ்க்கையும் எப்படியிருந்த போதிலும் மனிதகுலம் யாவும் படைப்பில் ஒன்று தான் என்றனர். இப்படி பல மாதிரி-யாக கருத்துக் கூறும் மனிதர்களை விட்டு விட்டு, நாம் மறுபடியும் அந்த எளிய மேல்மாடிக்கு நேராக நம் கண்களை ஏறெடுத்து, காதுகளைத் தீட்டி, நம்முடைய அருமை இரட்சகர் இந்த ஒருமைப்-பாடு எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும் என்று மன்றாடுகிறார் என்று கவனிப்போம். ''நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்'' என்கிறாரே! மறுபடியும் கவனமாய்க் கேளுங்கள்: அவரும் பிதாவும் எப்படி ஒன்றாயிருக்கிறார்களோ அப்படி உலகெங்கிலும் உள்ள விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் என்பது தான் அவர் மன்-றாட்டு ''தேவனும் இயேசுவும் எப்படி ஒன்றாயிருக்கிறார்கள்'' தேவனும் இயேசுவும் தெய்வீகத் தன்மையில் ஒன்றாக இருக்-கிறார்கள். செயல்பாட்டில் ஒன்றாக இருக்கிறார்கள் போதனையிலே ஒன்றாக இருக்கிறார்கள். இயேசு பிதாவினுடைய சித்தத்துக்கு மாறாக எதையும் செய்யாமல், பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன் என்கிறார். தேவன் எதைப் பேசச் சொன்னாரோ அதையே பேசினார். சுருங்கக் கூறின் இயேசுவின் உணவே பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவது தான் என்-கிறார் (யோவான் 4:34) தேவன், என்ன செய்யப்பட வேண்டும் என்று விரும்பினாரோ அதை நிறைவேற்றி வைப்பதுதான் இயேசு வின் பணி. யெகோவா தேவன் எதைச் சொன்னாரோ அதையே இயேசுவும் சொல்கிறார். யெகோவா என்ன நினைக்கிறாரோ அதையே இயேசுவும் நினைக்கிறார். அவர்கள் இருவரும் வாக்கிலும், சிந்தனையிலும், செயலிலும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருக்-கிறார்கள். அவர்களுள் எவ்வித வேறுபாடும் இல்லை. இதை ''தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்-குள் விவாசமாயிருக்கிறது'' என்று வர்ணிக்கிறார் பவுல் (கொலோ 2:9)

மேல் அறையில் இயேசு ஜெபித்த உருக்கமான ஜெபத்துக்கும் தற்காலத்தில் வாழுகின்ற கிறிஸ்தவ மக்களிடையே காணப்படுகிற ஒற்றுமையின்மை மற்றும் முரண்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத் தைக் கவனியுங்கள் : தம்மைப் போலவும், பிதாவைப் போலவும் ஒன்றாக இருக்க விசுவாசிகள் அனைவருக்கும் ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மரணத்தைச் சந்தித்த வேளையிலும் பிதாவிடம் மன்றாடினார். ஆனால் இங்கே விசுவாசிகள் பல கூறுகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் இணக்கமில்லாமல் செயல்படுவதோடு மட்டுமில்லாமல் முரண்பாடாகவும் செயல்படுகின்ற கொடுமையை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவருடைய உருக்கமான ஜெபம்

கேட்கப்படாமலும், அவருடைய மரண வாக்குமூலம் மதிக்கப்படா மலும் இருக்கிற நிலையைக் காணும் ஒரு உண்மை கிறிஸ்தவன் துக்கப்படாமல் இருக்கமுடியாது.

அந்த ஒருமைப்பாட்டை அவ்வளவு வலியுறுத்தி உருக்கத் தோடு மன்றாடின காரணத்தை அவர் வாய்மொழியாகவே கேளுங் கள். அவரை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருந்தால்தான் பிதா தான் அவரை அனுப்பினார்; மற்றபடி அவரே தானாக வந்து தனக்கு ஒரு உயர்ந்த நிலையைத்தேடவில்லை என்று உலகமக்கள்நம் புவர் என்கிறார். ஆம், சகோதரர்களே, இதுஉண்மை. அனைத்து விசு வாசிகளும் ஒன்றாக இருந்தால் தான் உலக மக்கள் இயேசு கிறிஸ்து வை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஏதுவுண்டாகும். இப்பொழுது காண்கிற நிலை முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத் தாரை இகழ்ந்தும், பழித்துக் கூறியும் விரோதிகளைப்போல் நடந்து கொள்கிறோமே. விசுவாசிகளிடம் காணப்படுகிற இந்த இழி நிலைக்கு நாம் செலுத்தி வருகிற அபராதம் மிக மிக அதிகம், பல கோடி ஆத்துமாக்கள். ஒரு ஆத்துமாவே உலகத்திலுள்ள அனைத் தையும் காட்டிலும் விலையுயர்ந்தது என்று வேதம் குறிப்பிடுகிறது. நம்முடைய பிரிவினை வாதமோ பலகோடி மக்கள் கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தடையாயிருக்கிறது ஏனெ னில் நம்முடைய ஒற்றுமையின்மை உலகறிந்த உண்மை. நாங்களும் கிறிஸ்துவைத் தான் பின்பற்றுகிறோம் என்று வாயினால் சொல்லு கிறார்கள். ஆனால் தங்கள் செயல்களால் மறுதலிக்கிறார்கள். உலகம் இதை உற்று கவனித்துவிட்டு சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத கிறிஸ்தவம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒதுங்கி ஓடுகிறார்கள்.

நான் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பெற்ற அநேகமாயிரம் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாததற்காக பல காரணங் களைச் சொன்னாலும், கிறிஸ்தவர்களுடைய ஒற்றுமையின்மை, முரண்பாடான உபதேசங்கள், ஆகிய காரணங்களைச் சாக்காகச் சொல்பவர்களே மிக மிக அதிகம். எனக்கு மிகவும் கவலை தரும் விஷயம் என்னவென்றால் எத்தனையோ காரணங்கள் இருந்தா லும் பிரிவினை வாதம் தான் கிறிஸ்துவை தேவனுடைய குமா ரன் என்று உலகம் ஏற்றுக் கொள்ளாததற்கு பெருந்தடையாக இருக்கிறது என்பதுதான். ஆனால் என்ன ஆச்சரியம்! அப்படிப் பட்ட பயங்கர விளைவுகளை உண்டாக்குகிற பிரிவினை வாதத் தைப் போதிக்கிற போதகர்கள் கணிசமான மக்கள் கூட்டத்தை தங்கள் நயவசனப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் வஞ்சித்து

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கூறு போட்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் எல்லோரும் அவரை உண்மையாகவே நேசிக்கிறதாக இருந்தால் இந்த இழிநிலையைக் களைந்தெறிவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? சாவு நிச்சயம் என்று திட்ட வட்டமாக அறிந்த கர்த்தர் கடைசி நிமிஷத்தில் முகம் குப்புற விழுந்து பிதாவே, நீரும் நானும் ஒன்றாயிருப்பது போல என்னை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபித்ததை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தோமானால் இந்தப் பிரிவினை வாதத்தை எதிர்த்துப் போராடாமலிருப்போமா!

ஒரு வேளை இந்த ஐக்கியம் சாத்தியமில்லை என்று நினைக்கிறோமா? அப்படி நினைக்கலாகாது. ஒரு நல்ல கிறிஸ்தவன் ஒரு விஷயத்தை அணுகும்போது அவனுடைய அனுபவத்தையோ, வாதத் திறமையையோ கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் விசுவாசத்தையே அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். மா வீரன் கோலியாத்தை வீழ்த்திய சிறு தாவீதை எண்ணிப் பாருங்கள்.

## நாம் மறுபடியும் ஒன்றாயிருப்பது சாத்தியமே

விசுவாசிகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தேவ சித்தம். இயேசு அதற்காக ஜெபித்தார். ஆகவே அது நிச்சயம் நடக்கும். தேவன் செயல்படுத்த முடியாத ஒன்றைக் குறித்து கட்டளை கொடுப்பார் என்றால் சிலுவை விருதாகி விடுமே! நாம் இரட்சிக்கப் படும்படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் மரிக்க அனுமதித்து விட்டு, கடைப்பிடிக்க முடியாத ஒன்றைக் கட்டளையாகக் கொடுப்பாரானால் அவர் நோக்கத்தை அவரே தகர்த்தெரிகிறார். அதாவது சிலுவையை விருதாவாக்கிறார் என்றல்லவா பொருள்படும்.

மனிதனுக்கு ஏற்படுகிற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் வேதாகமத்தில் தீர்வு உண்டு. அப்படியானால் கிறிஸ்து மன்றாடி ஜெபித்த ஒருமைப்பாடு சீர்குலைந்து கிடப்பதையும் சரி செய்ய வழி இருக்குமே! பிரிவினை வாதம் இன்று நேற்று முளைத்த பிரச்சனை அல்ல இது ஒரு பழைய நோய். முதல் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாகிய கொரிந்து பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலன் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கி தூய எளிய சுவிசேஷத்தைப் பிரகடனம் பண்ணினார் அதைக்கேட்டு விசுவாசித்த பல கொரிந்தியர்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர் (அப் 18:8) இவ்விதமாய் அங்கே ஓர் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் வேறு இடத்துக்கு

சுவிசேஷம் அறிவிக்கச் சென்றுவிட்டார். கொஞ்ச நாட்கள் கழிந்தன அங்கே கொஞ்சம் குழப்பம் என்று பவுலடியாருக்குத் தகவல்வந்தது அவைகளில் பிரதானமானது பிரிவினை அவர்கள் ஒன்றாயிருந்த சபையைப்பிளந்து கூறுபோட்டு ஒவ்வொரு கூறுக்கும் ஒரு பெரிய புள்ளியின் பெயரைச்சூட்டி, நான் அவரைச் சார்ந்தவன், நான் இவரைச் சார்ந்தவன் என்று பிரிந்து செயல்பட்டனர் (1கொரி1:10) இதைக் கேட்டு மனமுடைந்த பவுலடியார் அவர்களுக்கு ஒரு அறிவுரைக் கடிதம் எழுதினார் இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் பவுல் அந்தப் பிரிவினையை அங்கீகரிக்கவில்லை. மாறாகக் கண்டித்தார். கொஞ்சம் மனவேறுபாடு இருந்தால் பிரிந்து செயல்படுவது ஒன்றும் தவறில்லை என்ற மாதிரி பூசிமெழுகவில்லை தனக்குத் தெரிந்த மொழியில் மனதை உருக்கக்கூடிய வார்த்தைகளைப் உபயோகித்து எழுதினதாவது: நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவேண்டும் என்று புத்தி சொல்லுகிறேன் என்கிறார் (1 கொரி 1:10) ஆனால் இன்றைக்குச் சில பேர் எல்லோரும் ஒரே காரியத்தைப் பேசுவது கூடாத காரியம் என்று வாதிடுகின்றனர் நாம் எல்லாரும் ஒன்றாயிருப்பதும் ஆகக்கூடிய காரியம் அல்ல என்கின்றனர். அன்றைய உலகின் பெரிய நகரங்களில் ஒன்று என்று கருதப்பட்டதும் அநேகமாயிரம் விசுவாசிகளைக் கொண்டதுமான அத்த சபைக்கு (அந்த சபையில் சுமார் 60,000 அங்கத்தினர்கள் இருந்திருப்பர்கள் என்று நம்பப்படுகிறது) நீங்கள் நேசிக்கிற நீங்கள் பின்பற்றுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டளையிட்டுச் சொல்லுகிறதாவது! நீங்கள் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்'' என்கிறார் இது மனுஷருடைய ஆலோசனையில்லை பரிசுத்த ஆவியானவரின் கட்டளை.

ஆனால் கொரிந்து பட்டணத்து சபை பல கூறுகளாகப் பிரீந்து நின்று செயல்பட்டது புதியவர் ஒருவர் கொரிந்து பட்டணத்துக்குப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம் அவர் அங்குள்ள ஒரு விசுவாசியைப் பார்த்து, நீங்கள், ஒரு விசுவாசியா? அதற்கு ஆம் என்று பதில் வந்தால் மீண்டும் ஒரு கேள்வி தொடரும்: நீங்கள் யாரைப் பின்பற்றுகிற விசுவாசி? அதற்கு அவர் நான் அப்போல்லாவைச் சேர்ந்தவன் அல்லது கேபாவைச் சேர்ந்தவன் அல்லது பவுலைச் சேர்ந்தவன் என்றே பதில் வரும்.

பவுலடியார் இந்த நிலைமையைக் கேட்டு கொரிந்து சபையாரைக் கடிந்துகொண்டு, ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா, உங்களுக்காகச் சிலுவையில் மரித்தார்? பவுல் பெயராலா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?'' என்று சாடுகிறார். பவுல் ஏன் அவ்வளவு

கடுமையாக பிரிவினைவாதிகளைக் கடிந்து கொள்கிறார்? ஒருமைப் பாட்டை உருவாக்க முடியாது என்று நினைத்துக் கொண்டு அவர் களைக் குறை கூறாமல் விட்டிருக்கலாமே ஏன் அப்படி விடவில்லை? அவர்களுடைய பின்னணி வித்தியாசமானது அவர்கள் சிந்தனை யோட்டம் வித்தியாசமானது. ஆகவே: அவரவர்கள் விருப்பப்படி விசுவாசிகள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று அவர் ஏன் விட்டு விடவில்லை ?

**பவுல் பிரிவினையைக் கண்டிப்பதற்கு ஏவப்பட்டதற்‍கான காரணத்தை விளக்குகிறார்.**

நீங்கள் இன்னும் மாம்ச சிந்தையுள்ளவர்களாக இருக்கிறீர் கள் [கொரி 3:3] மாம்ச சிந்தை என்றால் உலகியல் கோட்பாடு அதாவது உலகுக்கு அடுத்த காரியங்களில் நாட்டம் ஆவிக்குரிய சிந்தனைக்கு விரோதமான போக்கு கொரிந்து சபையில் உள்ள விசு வாசிகள் மாமிச சிந்தையுடையவர்கள். தேவநீதிக்குப் பயப்பட்டு நடக்கிறவர்கள் அல்ல, அவர்களுக்குள்ளே பொறாமையும், விரோ தங்களும் பிரிவினைகளும், காணப்பட்டது.(1கொரி 3:3-6) ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவன் என்கிறான். இன்னொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்கிறான், எங்கே விசுவாசிகள் தங்களை வித்தியாசமான பெயர்களால் அழைத்துக் கொண்டு நாங் கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் என்று சொல்கிறார்களோ அங்கே ஆவியின் சிந்தையோ நீதியோ இருக்க முடியாது. மாம்ச சிந்தை, உலகியல் ஈடுபாடுகள் இவைகள் தான் இருக்கும்.

கர்த்தரை விசுவாசிக்கிற மக்கள் பவுல் அப்போஸ்தலன் மூல-மாய் பேசுகிற பரிசுத்த ஆவிக்குச் செவி கொடுக்க வேண்டும். இரண்டு விசுவாசிகளோ அல்லது இரண்டு லட்சம் விசுவாசிகளோ எண்ணிக்கையைப் பற்றிக் கவலையில்லை. அவர்கள் மத்தியில் பிரிவினை காணப்பட்டால் அங்கே பாவம் சம்பந்தப்பட்டிருக்-கிறது. அங்கே மாமிச சிந்தை ஆதிக்கம் செலுத்துகிறது. பாவம் ஒருவர் மீதோ அல்லது அவரை எதிர்க்கிற இன்னொருவர் மீதோ இருக்கலாம் அல்லது இருவர் பேரிலும் கூட இருக்கலாம். ஆனால் பாவம் இருப்பது நிச்சயம்.

**இந்த பாவத்தை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?**

விசுவாசிகளுக்கிடையே பிரிவினை ஏற்படுவதற்கு மூலகாரணம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுவதாகும். ஆகையால் பிரிவினை நோய் அகற்றப்பட வேண்டுமானால் வேதாகமத்தில் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதி வைத்திருக்கிற உபதேசச் சட்டங்களுக்கு மிஞ்சி மாந்த அறிவைக் கலப்படம்

செய்து விடாமல் விழிப்பாக இருக்க வேண்டும். கொரிந்து சபையில் விசேஷித்த வரம் பெற்ற விசுவாசிகள் கூட இருந்திருப்பதாகத் தெரிகிறது அவர்கள் கூட சபைக்கு ஏதாவது செய்தி சொல்லுவார்களானால் அது எழுதப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இசைவாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்கிறார். தற்காலத்தில் அநேக பிரசங்கிமார்கள் எழும்பி நான் வரம் பெற்றவன், பரிசுத்த ஆவியானவரோடு எனக்கு நேரடித்தொடர்பு இருக்கிறது. அவர் எனக்கு அவ்வப்பொழுது காரியங்களை வெளிப்படுத்துகிறார் என்றும் இன்னும் கற்பனை செய்து பார்க்க முடியாத சங்கதிகளையும், உபதேசங்களையும் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லுகிறார்கள்; அவர்கள் தங்கள் கூற்றை மெய்ப்பிப்பதற்காக சில அற்புத அடையாளங்களையும் செய்வதாக விளம்பரப்படுத்துகிறார்கள். இது ஆவியானவருடைய அங்கீகாரம் பெற்றதா? விசுவாசிகளையெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென உருக்கமாய் வேண்டிக் கொண்ட ஆவியானவர் இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக காரியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பாரா? அப்படியானால் வெளி 22:18,19க்கு என்ன பொருள்? கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது என்கிறாரே யாக்கோபு பூரணப்பிரமாணம் என்கிறாரே. யாக் 1:25. ஒருவன் எவ்வளவு பெரிய மனிதனாக — வானத்திலிருந்து வந்த தூதனாக இருந்தாலும் சரி, வித்தியாசமான போதனைகளைக் கொண்டு வருவானானால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அப்போஸ்தலன் பவுலும், யோவானும் நம்மை எச்சரிக்கிறதைக் கேளுங்கள். (கலா 1:6-9; 2யோவான் 9:11)

நாம் எழுதப்பட்டிருக்கிற வார்த்தையின் படி நடந்தால் ஒருவருக் கொருவர் பெருமை பாராட்ட மாட்டோம். இது ஓர் அற்புதமான உண்மை. நம் அனைவருக்கும் வேதம் கூறுகிற அறிவுரை பவுலும் அப்பொல்லோவும் இதற்கு சிறந்த முன் மாதிரிகள். எங்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் பவுல். (1 கொரி 4:6) நானும் நீங்களும் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நாமும் அதைப் பின்பற்றுவோம். எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை தெளிந்த மனதோடு வாசித்து, நம்முடைய பாரம்பரியமோ, சுற்றுப்புற சூழல்களோ நம்மை மோசம் போக்கி விட அனுமதியாமல் ஒரே காரியத்தை நம்புவோம் ஒரே காரியத்தைப் பேசுவோம். ஏனெனில் சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலனாயிருக்கிறது. அது முதல் நூற்றாண்டில் அநேக ஆத்துமாக்களை இரட்சித்து அன்றைய நாகரீக உலகம் அனைத்திலும் பரவிக் கிரியை செய்தது என்றால் இன்றைக்கு மட்டும் ஏன் முடியாது? புதிய வெளிப்

பாட்டுக்கும், விதவிதமான கொள்கைக் குழப்பங்களுக்கும் அவசியம் ஏன்? சிந்திப்பீர்! இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் நாம் வேதாகமம் ஒன்றையே பின்பற்ற வேண்டும். எழுதப்பட்டிருக்கிற வசனத்தின் வெளிச்சத்தில் நாம் நடந்தால் வேற்றுமைக்கு இடம் ஏது? அதைத் தானே பேதுருவும் வற்புறுத்துகிறார். **''ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்''** (1பேது 4:11) ஆகவே நண்பர்களே! மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிப்பவர்களை நிராகரித்து விட்டு வேதாகமம் பேசுகிற இடத்திலே பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்திலே நாமும் மௌனமாக இருப்போம். அதுவே ஒற்றுமைக்கு ஓரே வழி.

**E.Z. செல்வநாயகம்**

*(28-ம் பக்கத் தொடர்ச்சி)*

**புதிய ஏற்பாட்டில் சபை எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

- தேவனின் ஆலயம் (1 கொரி 3:16)
- கிறிஸ்துவின் மணவாட்டி (கொலோ 1:24; எபே 1:22, 23)
- தேவ குமாரனுடைய இராஜ்ஜியம் (கொலோ 1:13)
- தேவனுடைய வீடு (1தீமோ 3:15)
- சபை (எபே 3:10)
- தேவனுடைய சபை (1 கொரி 1:12)
- முதல் பேறானவர்களுடைய சபை (எபி 12:23)
- கிறிஸ்துவின் சபையார் (ரோமர் 16:16)

**இறுதியாக, இதோ தெரிந்து கொள்ளுங்கள்**

**அதே சபை** — இன்று உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது.
— உங்கள் ஊரிலும் இருக்கக்கூடும்
— ஒரு பிரிவு சபை அல்ல
— தேவனுடைய வசனத்திற்கு உண்மையாக நடந்து கொள்ளுகிறது
— ஓரே சத்தியம் ஓரே போதனையுடையதாக இருக்கிறது
— தேவனுடைய நற்செய்திக்குக் கீழ்ப்படியும் அங்கத்தினர்களைக் கொண்டது
— மனித அதிகாரத்திற்கு உட்படாதது
— கிறிஸ்தவன் என்ற ஓரே பெயரைத்தரித்துக் கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது
— கிறிஸ்துவின் பெயரையே சபை தரித்துக் கொண்டுள்ளது

வசனங்கள் பேசும் இடத்தில் பேசி, அவை பேசாதவற்றை பேசாத உறுப்பினர்களைக் கொண்ட ஓரே சத்திய சபை **கிறிஸ்துவின் சபை மட்டுமே !**

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை, அல்லது எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

# சிறுபிள்ளைத்தன அடாவடித்தனம்

குழந்தைகள் பல ரகம். சில குழந்தைகள் சாதுவாக, சொன்னால் கேட்டு நடக்கும். சில பிள்ளைகள் அடங்காமல் அடம்பிடிக்கும் குழந்தைகள் தாங்கள் விரும்பினதைச் செய்யவும் பெற்றுக்கொள்ளவும் பலவிதமான ராவுடிகள் செய்யும். சில குழந்தைகள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு முகத்தை 'உர்'' என்று வைத்துக்கொண்டு ஒதுங்கி உட்கார்ந்து கொள்ளும். அதை கவனிக்கிற பெற்றோர்கள் அதைத் 'தாஜா' பண்ணி அது விரும்பி னதைக் கொடுத்தோ அல்லது செய்ய அனுமதித்தோ அதைக் குஷிப்படுத்த வேண்டிவரும். இன்னும் சில குழந்தைகள் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி தன் தலையை சுவற்றிலோ, கதவின் மீதோ மோதிக்கொள்ளும். கால்களை உதறிக்கொண்டு படுத்துப் புரண்டு பிராண்டி தன் கோபத்தை வெளிப்படுத்தும். சிலதுகள் கெட்ட வார்த்தைகளைக் கூடப்பேசும். (அது பெரும்பாலும் தங்கள் பெற்றோர்களிடம் கற்றுக் கொண்டவைகள் தான்) இன்னும் சில முரட்டுக் குழந்தைகள் பெற்றோர்களைப் பிராண்டி, அறைந்து, கடித்துக்குதறும்.

சில பெற்றோர்கள் இந்த அடாவடித்தனங்களைக் கூட ஆனந்தமாய் ரசித்துப் பெருமைப்படுவர். அது கேட்டதைக் கொடுத்தால் தான், அவன் விரும்புகிறதைச் செய்ய அனுமதித்தால் தான் அடங்குவான் என்று அதனுடைய வீரப்பிரதாபங்களைப் பறை சாற்றுவார்கள்.

அவர்கள் கூற்று உண்மையா? பெற்றோர்கள் பிள்ளை களுடைய அடாவடித் தனங்களுக்கு கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டுமா? தேவையே இல்லை. எதைச் செய்தால் பெற்றோர் களைப் பணிய வைக்க முடியும் என்று குழந்தைகள் புரிந்து கவனித்து கொண்டிருக்கின்றன. ஒரு மாதிரிக் கோணங்கித்தனம் எல்லாம் பண்ணினால் தான் பெற்றோர்கள் நம்முடைய விருப்பத் தின்படி செயல்பட இணங்குவார்கள். என குழந்தைகள் இடக்குப் பண்ணுவார்கள். பிறகு அதுவே அவர்களுடைய அன்றாட நடை முறையாகி விடும்.

ஆனால் புத்திசாலித் தாய்மார்கள் குழந்தைகள் அம்மாதிரி அடம் பிடிக்கிற பழக்கத்தை முளையிலே கிள்ளி எறிந்து விடுவார் கள். அப்படிச் செய்தால் அங்கே அடாவடித்தனம் என்ற செடி வளர்வதற்கே வாய்ப்பிருக்காது.

அடாவடித்தனத்தை எப்படி சமாளிப்பது என்பதற்குச் சில ஆலோசனைகள் :

1. குழந்தை எதைச் செய்ய வேண்டும் அல்லது எதை வேண்டுமென்று கேட்கிறதோ அதை கண்டிப்பாகக் கொடுக்கவே கூடாது.

2. பெற்றோர்களின் குரலில் தொனிக்கிற உறுதி அடாவடித்தனம் என்ற புயல் எழும்புவதைத் தடை செய்யமுடியும். பெற்றோர்கள் அரை மனதுடன் இளக்காரமாக அவர்களிடத்தில் பேசினால் அவர்கள் இன்னும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கூட்டுவார்கள். ரொம்பவும் எல்லை மீறிப் போகிறதை உணர்ந்து பெற்றோர்கள் உறுதியுடன் நின்றால் அப்புறம் வழிக்கு வந்து விடும்.

3. மற்றவர்கள் அவர்களுடைய சேஷ்டைகளைப் பார்க்கிறார்கள் இரசிக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இன்னும் கொண்டாட்டம். ஆகவே அவர்களைத் தனிமைப்படுத்தி ஒழுங்குக்கு வரும் வரை உனக்கு ஒன்றும் கிடைக்காது என்று கண்டிப்புடன் இருந்தால் பணிந்து விடும். இந்த அணுகுமுறை அவர்களுடைய போராட்டத்தை பிசுபிசுக்க வைத்துக் கோரிக்கையை விரைவில் கைவிட்டு விட்டு சமரசத்துக்கு வந்து சேரக் கைகொடுக்கும்.

4. குழந்தையைத் தொட்டு அடிப்பதை தவிர்க்க வேண்டும். அவசியம் என்றால் ஆத்திரம் அடையாமல் அளவோடு சில அடிகள் கொடுக்கலாம். தலை மீது அடிப்பதும், காதைத் திருகவும், அடிப்பதும் கூடாது. எந்த உறுப்பு தவறு செய்கிறதோ அந்த உறுப்பைப் பார்த்து நிதானமாய், அளவாய் அடிக்கலாம் கால்களால் உதைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். சிறுமிலாறினால் காலைப் பார்த்து நாலு வீச்சு வீசினால் அது வேலை செய்யும். அதே போல் கையைப் பார்த்து, விரலைப் பார்த்து என்று சந்தர்ப்பத்துக்கு தக்கவாறு அளவோடு நிதானமாய் சிறு சிறு தண்டனை கொடுக்கலாம். இம்மாதிரி அடாவடித்தனங்களைச் செய்யும் குழந்தைகளைத் தண்டிக்கும் போது நாம் உணர்ச்சி வசப்படக் கூடாது. தாங்கள் பெற்றெடுத்த மழலைச் செல்வங்கள் தெரியாத் தனமாகச் செய்யும் குறும்புத் தனங்களையெல்லாம் சகித்துக் கொண்டு அவர்களுக்கு நற்பழக்கங்களைக் கற்றுத் தருவது பெற்றோருடைய கடமை தானே! கர்த்தருடைய வசனங்கூட "நம்பிக்கையிருக்கும் மட்டும் உன் மகனை சிட்சை செய், ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை எழும்ப வொட்டாதே" நீதி 19:18.

- பெட்டி பர்ட்டன் சோட்

# கிறிஸ்துவின் சபையைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

* புதிய ஏற்பாட்டில் சபை முதல் முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. — (மத். 16:18; ரோமர் 16:16).
* இயேசு கிறிஸ்துவால் கிரயத்திற்கு வாங்கப்பட்டு, கட்டப்பட்டது. — (மத். 16:13-18; அப். 20:28).
* கிறிஸ்துவை மட்டுமே அஸ்திபாரமாகக் கொண்டு, கட்டப்பட்டது. — (1 கொரி. 3:11).
* பவுல், அப்போலோ, கேபா அல்லது வேறு எந்த மனிதனின் மேல் அல்லது மனிதனால் கட்டப்படவில்லை, (1 கொரி. 1:12,13).
* கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்த பின்னர் வந்த முதலாம் பெந்தே கோஸ்தே நாளிலே முற்றிலுமாக சபை நிறுவப்பட்டது.

(லூக். 24:49; அப். 1:8; மாற்கு 1:9; அப். 2).

**உங்களுக்குத் தெரியுமா? கிறிஸ்து தானே....**

* சபையை நேசித்தார் (எபே. 5:25).
* சபைக்காக இரத்தஞ்சிந்தினார் (அப். 20:28).
* சபையை நிறுவினார் (மத். 16:18).
* என் சபை என்று உரிமையோடு அழைத்தார் (மத். 16:18),
* மக்களை சபையில் சேர்த்தார் (அப். 2:47).
* சபைக்குத் தலைவராக இருக்கிறார். (எபே. 5:23; 4:4: 1:22,23).
* சபையை இரட்சிப்பார் (எபே. 5:23 ; 4:4 ; 1:22, 23)

**உங்களுக்குத் தெரியுமா? புதிய ஏற்பாட்டு காலத்திலே' சபை....**

* தேவனின் ஒரே குடும்பமாக இயங்கிற்று (எபே. 3:15).
* கிறிஸ்துவின் ஒரே இராஜ்ஜியமாக இருந்தது. (கொலோ. 1:13,14).
* கிறிஸ்துவின் ஒரே சரீரமாக இருந்தது (எபே 1:22, 23:4:4
* கிறிஸ்துவின் ஒரே மணவாட்டியாக விளங்கிற்று. (ரோமர் 7:1:7; எபே 5 22,23)
* கிறிஸ்துவின் ஒரே சபையாக இருந்தது (மத் 16:18; எபே1 ; 22, 23;4:4)



25ம் - பக்கம் பார்க்கவும்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:15 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No. 58 ERODE-638 001.